293

போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்



Venkatachalam S. 1941-43.

Editor & Publis... ... Lourduswami, B.A., L.T.
R... ...ining School, Trichinopoly.

... ஜூலை 1947 மலர் 1

...முறை பாடசாலை, திருச்சினாப்பள்ளி.

வருஷ சந்தா ருபாய் 1. தனிப்பிரதி அணா 2.

JL
ண211, N11-P
N147 .38.1.
210012

போதன விஷயப் பூங்கொத்து

கொத்து 38]   15 ஜுலை 1947   [மலர் 1

பத்திராதிபர் குறிப்புகள்

பூங்கொத்தின் புதுவருடப் புதுமலர்:—இந்த ஜுலை மாதத்திலிருந்து நமது "பூங்கொத்தின்" 38-வது வருடம் தொடங்குகின்றது. இதுகாறும் இதனை அன்புடன் ஆதரித்துவந்துள்ள நம் பழைய மாணவர்கட்கும், ஏனைய சந்தாதாரர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

மேலும், இதுவரை இதனைப் போற்றிவந்திருப்பதுபோலவே இனியும் ஆதரித்தும், புது சந்தாதாரர்களைச் சேர்த்தும், விஷயதானம் புரிந்தும் தங்கள் அபிமானத்தை அதிகரித்துக்கொள்ளுமாறு நம் நேயர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

New Admissions:—வழக்கம்போல் இவ்வருடத்தில் நம் போதனமுறைப் பாடசாலையில் "எலிமெண்டரி கிரேடில்" 80 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

அடுத்த ஆகஸ்டு மாதம் முதல் தேதியன்று, "ஸெக்கண்டரி கிரேடு" மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சேர்த்துக்கொள்ளப்படுவர். இவ்விஷயமான அரசாங்க அறிக்கையை மற்றோரிடத்திற் காண்க. அவ்வறிக்கையின்படி நமக்கு மனுசெய்துகொள்ளுபவர்களை நம் போதனமுறைப்பயிற்சியில் சேர்த்துக்கொள்ள சகல ஏற்பாடுகளையும் செய்வோம்.

நம் பாடசாலை தியானம்:—அடுத்த ஆகஸ்டு மாதம் 28, 29, 30 தேதிகளில் வழக்கம்போல் நம் பாடசாலையில் தியானம் நடைபெறும். அச்சமயம் தியானம் செய்ய விரும்பும் நம் பழைய மாணவர்கள் தங்கள் விருப்பத்தை முன்னதாகவே நமக்குத் தெரிவித்துக்கொள்ளக்கடவர். நம் பழைய மாணவர்கட்கு மாத்திரம் ஷை தியான நாட்களில் துறைந்த சார்ஜில் போஜனம் இடவசதி முதலியன அளிக்கப்படும்.

சென்னை கல்வி இலாகா

Proceedings of the Director of Public Instruction, Madras

Sub. Madras Educational Rules—Admission to Secondary Grade Training course—Relaxation of the rules regarding the minimum number of marks prescribed previously.

In supersession of Proceedings Rc. 8094-B1/46 dated 14-6-47, the following instructions are issued in regard to the admission of candidates to the Secondary grade training course during 1947-48.

(*a*) Preference should be given to eligible S. S. L. C. holders and Matriculates.

(*b*) The Divisional Inspectors and Inspectresses may fill in vacancies after admitting all those qualified under (*a*) by admitting ineligible S. S. L. C. holders and failed Matriculates, who have secured at least the following marks—30% in each of the subjects—English, Language, Elementary Mathematics and Optional and 25% in each of the two subjects—Elementary Science and History and Geography.

(*c*) Cases of candidates, if any, who have not secured the above marks, but who in the opinion of the Divisional Inspectors or Inspectresses deserve admission for special reasons should be submitted to the Director for orders with full particulars of marks obtained by the candidates.

(*d*) In admitting candidates under item (*b*) above, no distinction is to be made between untrained men and women and others who are already trained teachers of the Higher Elementary grade.

These instructions are applicable to both Government and Aided training schools.

Proceedings of the Secretary, Board of Secondary Education, Madras.

(*Dated 30th June 1947*)

Admission of Members of the Teaching Profession to appear for the S. S. L. C. Public Examination

It is hereby notified that Government in their Order Ms. No. 685, Education, dated 9th April 1947, have permitted members of the teaching profession, such as Pandits, Munshis, Weaving Instructors, Instructors in other crafts, Physical Training Instructors, Drawing Masters, Music Teachers, Manual Training Instructors and Commercial Instructors, who have been in service as whole-time teachers in recognized schools under the control of the Director of Public Instruction, Madras, for at least three years and who possess the qualifications prescribed in rule 13 of the Madras Educational Rules to appear as '*private*' candidates for the S. S. L. C. Public Examination to be held from March 1948 to 1950.

Teachers who have already appeared for the S. S. L. C. Public Examination as pupil candidates cannot appear under this regulation.

Results of the T. S. L. C. Examination, March 1947

FAILURES

Secondary Grade

Reg. No.	NAME	Group in which failed
10887	P. Muthusamy	B
10891	S. Antonymuthu	B
10903	T. S. Krishnamurthy	B
10906	M. Ramamurthy	B
10909	V. Krishnasamy	B
10911	D. Ardhanari	B & C
10912	A. Savarinathan	B
10913	P. N. Palaniappan	B
10914	M. Gopalakrishnan	B
10916	T. Duraisamy	B
10918	T. N. Subramaniam	B
	Old Students	
10919	S. John Rethnasamy	B
10921	S. Jegadoss	B
10923	S. Chinnappa	B

Elementary Grade

Reg. No.	NAME	Group in which failed
3620	V. Gurusamy	C
3623	S. Ramasamy	A & C
3626	A. Dhanasamy	C
3657	K. Govindasamy	B & C
3671	C. Palaniandi Muthirian	C
3688	A. Masillamani	B & C
	Old Students	
3702	V. Natarajan	C & D
4001	I. James Masillamani	A & C
4078	M. Manikkam	A
4283	V. Gnanadikkam	A

OFFICE OF ... MADRAS

N.B.— (i) Secondary Grade:
B Group = English—Methods and Texts.
C „ = Special Methods I & II.

2100/2

(ii) Elementary Grade:
A Group = Child Nature.
B „ = Tamil Text and Methods.
C „ = Mathematics Method.
D „ = Methods, History, Geography & R. S. P.

இலக்கண போதனை

N. R. Nanjundeswaran.
Headmaster, R. C. Higher Ele. School, Karumuthampatti, Somanúr P.O.

ஒரு பாஷையைத் திருத்தமாகப் பேசவும் எழுதவும் கற்பிக்கும் நூல் இலக்கணமாகும்: ஒரு மொழியைக் கற்பதின் நோக்கம் தங்கள் கருத்துக்களை பிழையின்றிப் பேசவும் எழுதவும் பழகுவதேயாம்: பிழையின்றிப் பேசவும் எழுதவும் இலக்கண அறிவு அவசியமாகும். மொழிகளை இசைத்து வாக்கியங்கள் அமைப்பதற்கே இலக்கண அறிவு அவசியமாய் இருக்கின்றது. சிறுவர் இலக்கண விதிகளை நன்கு கற்றறிந்தால் மாத்திரம் போதாது. அவ்விதிகளை அனுஷ்டானத்தில் கையாண்டு எழுதவும் பேசவும் பழகி இருக்கவேண்டும்.

இலக்கணத்தை எம்முறையில் கற்பித்தல் என்ற பிரச்சனை எழுகின்றது. சிறுவர் வசன பாடத்தையும் மற்ற பாடங்களையும் கற்பது போல இலக்கணத்தையும் கற்று வந்தனர். கீழ் வகுப்புகளில் சிறுவர்களுக்கென்று பிரத்யேகமாக எழுதப்பட்ட இலக்கணப் புத்தகங்களும்,

மேல் வகுப்புகளில் நன்னூலும் முறையே போதிக்கப்பட்டு வந்தன. ஆனல் கல்வி ஆராய்ச்சியாளர்கள் இம்முறையைக் கண்டித்தனர். மாணவர்கள் இலக்கண விதிகளை இலக்கணப் புத்தகங்கள் மூலம் கற்பதால் யாதொரு பயனையும் அடைவதில்லை என்றும், சிறுவர் இலக்கண விதிகளை குருட்டுத்தனமாக மனப்பாடம் செய்கிறார்கள் என்றும் அவர்கள் பேச்சிற்கும் எழுத்திற்கும் இந்த இலக்கண ஞானம் பயன்படுவதில்லை என்றும் கூறினர். இலக்கண விதிகளை நன்கு அறிந்துகொண்டு பேச்சையும் எழுத்தையும் திருத்திக்கொள்ளவேண்டும் என்றால்: ஒவ்வொரு விதியையும் தங்கள் அனுபவத்தில் கண்டறியவேண்டும். அவர்கள் தினந்தோறும் கையாளும் பாடப்புத்தகத்தின் மூலமாயும் மொழித்தேர்ச்சிக்குரிய பயிற்சி வகைகளாலும் கற்றுக்கொள்வதே சிறந்த முறையாகும். (Semigrammatical exercises.)

இவ்வித அபிப்பிராயப்பேதத்தின் காரணமாகவே இலக்கணம் கற்பிக்கும் முறையில் இரு முறைகள் உண்டாயின :—

1. இலக்கணத்தைத் தனித்தனியாக ஒரு இலக்கணப் புத்தகத்தின் மூலம் கற்பித்தல். (Deductive method.)

2. சிறுவர்கள் இலக்கண விதிகளை உதாரணங்களை ஆராய்ந்து சுயமாகக் கற்றுக்கொள்ளும்படி செய்தல். (Inductive method.)

Deductive method :—(அனுமித முறை.)

இலக்கணநூலைப் போதித்தல்

இலக்கணநூலைக் கற்பிப்பதால் மாணவர்கள் விதிகளை நன்கு மனனம் செய்துகொள்வார்கள். இலக்கணம் கிரமமாக வகுக்கப்பட்டு போதிக்கப்படும். இம்முறையில் தொடர்ச்சியான அறிவு ஏற்பட வழி உண்டு. ஆனல் இம்முறை மாணவனின் மனோபாவத்திற்கு ஏற்றதல்ல. இலக்கண விதிகளை சிறுவர் பாராமல் ஒப்பிப்பாரே ஒழிய அவைகளின் பிரயோகத்தை (usage) அறிந்துகொள்ளமாட்டார்கள். ஒரு பாஷையை நன்கு பேசவும் எழுதவும் இலக்கண விதிகளின் அறிவு மாத்திரம் போதாது. தான் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் சொல்லும் இலக்கண விதியின்படி அமைந்துள்ளதா என்று சோதித்துக்கொண்டே இருக்க முடியுமா! பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் தொடர்ந்த பயிற்சியின் மூலம் ஏற்படுபவை. பல பாடங்களைப் படிப்பதாலும் பலவிதம் பயிற்சிகளைக் கைக்கொள்வதாலும் மாணவர்கள் சொல் அமைப்பையும் வாக்கிய அமைப்பையும் தாமாகவே கற்றுக்கொள்ளுகின்றனர். மேலும் நமது

மாணவர்களுக்கு எல்லா இலக்கண விதிகளையும் அறிந்துகொள்ளக்கூடிய திறமை கிடையாது.

குறிப்பு :—பேசும் திறமையும் எழுதும் திறமையும் இலக்கண விதியின் அறிவைப்பொருத்தது அல்ல என்பதைப் பார்த்தோம். அவ்விதமாயின் ஏன் இலக்கணம் போதிக்கப்படவேண்டும் என்ற பிரச்சனை எழுகின்றது. பயிற்சியின்மூலம் சிறுவர் நல்ல முறையில் எழுதவும் பேசவும் கற்றுக்கொள்கின்றனர். ஆனால் தங்கள் பேச்சிலும் எழுத்திலும் ஒரு சில பிழைகளை இழைக்கத்தான் செய்வார்கள். அப்பிழைகளைக் கண்டுகொள்ளவும் அவைகளைத் திருத்திக்கொள்ளவும் மாணவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இத்திறமையை ஏற்படுத்துவதற்காகவே பாடசாலைகளில் இலக்கணம் போதிக்கப்படுகின்றது.

2. இலக்கண விதிகளை மாணவர்களைக்கொண்டே கண்டுபிடிக்கச் செய்தல் (Inductive Method)

இம்முறையில் மாணவர்கள் விதிகளை மனப்பாடம் செய்வதில்லை. பெயர்ச்சொல்லின் தன்மையைப் போதிக்கவேண்டுமென்றால் சிறுவர்களுக்கு வகுப்பில் போதிக்கப்பட்ட பாடங்களிலிருந்து பல பெயர்ச்சொற்களைச் சேகரித்து க. ப.-வில் அவைகளை எழுதி அவைகள் ஒரேதன்மையாக இருத்தலை உணர்த்தவேண்டும். இவ்வுதாரணங்களிலிருந்து பெயர்ச்சொல் என்றால் என்ன? என்னும் விதியை சிறுவர்களே ஊகித்து அறிந்துகொள்ளும்படி செய்தல்வேண்டும். இலக்கண விதிகளைத் தனித்து போதிக்காமல் உதாரணங்களைக்கொண்டு விதிகளை உணரச்செய்தல் வேண்டும். இவ்விதம் சிறுவர் சுலபமாகப்பெற்ற அறிவானது நிரந்தரமானது.

ஆனால் நடைமுறையில் இருமுறைகளையும் தழுவியே போதிக்க வேண்டியிருக்கிறது. ஆரம்ப வகுப்புகளில் இலக்கண நூலைக் கையாள முடியாது: அவர்களுக்கு இலக்கணநூலைப் படிக்கக்கூடிய சக்தி கிடையாது. சில அவசியமான இலக்கண விதிகளை அவர்கள் பிரதம பாடப் புத்தகத்தில் உள்ள சில வார்த்தைகளை உதாரணமாகக்கொண்டு போதிக்கலாம். இலக்கண விதிகளை சிறுவர்களே கண்டுபிடிக்கவேண்டும். மேல் வகுப்புகளில் பிரத்யேகமாக ஒரு இலக்கண புஸ்தகத்தை உபயோகிக்கலாம். ஆனால் புத்தகத்தைக் கையாளும்போதும் இம்முறையைத்தான் பின்பற்ற வேண்டும். இவ்விலக்கண விதிகளை நன்கு அவர்கள் மனதில் பதியவைப்பதற்காக அநேக பயிற்சிகளைக் கையாளவேண்டும்.

அத்தியாயம் 4
தோல் நரம்புகளைப்பற்றியவைகள்
(முன்தொடர்ச்சி)

[V. S. Rajan]

தோலானது உடம்புக்கு மேற்போர்வைபோல் இருந்து கொண்டு கீழ் உள்ள பாகங்களைப் பாதுகாக்கிறது. தோலை உள்ளே துணி கொடுத்து தைக்கப்பட்ட போர்வைக்கு ஒப்பிட லாம். ஏனென்றால் அதை மேல்தோல் உள்தோல் என இரு பாகங்களாகப் பிரிக்கலாம். கொதிக்கிற நீர் தேகத்தில் படும் போது கொப்பளங்கள் உண்டாகின்றன. இந்தக்கொப்பளத்தில் இருந்து உண்டாகிற நீர் இருதோல்களுக்கும் இடையில் இருந்து உண்டாகிறது. உள் தோலில் ஆயிரக்கணக்கான வியர்வை கோளங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கோளங்களில் இருந்தும் சிறு குழாய்கள் உடம்பின் மேற்புறத்திற்கு வருகின்றன. கை சூடாய் இருக்கும் சமயத்தில் உடம்பில் அழுத்தினால் துவாரங்க ளின் வழியாக வியர்வை வருவதைப் பார்க்கலாம். வியர்வை முழுவதும் நீர் அல்லாமல் அதோடுகூட உப்பும், அழிபொருட் களும் கலந்திருக்கின்றன. இவை மூத்திரத்தில் உள்ள பொருட் களை ஒத்து இருக்கின்றன. வியர்வை வெளிவராதபடி சாயத்தை யாவது, மினுக்கெண்ணெயையாவது பூசினால் கொஞ்ச நேரத்தில் மரணம் சம்பவிப்பதைப் பார்க்கலாம். சிலர் உடம்பில் வியர்வை கூடுதலாக இருக்கும்போது வியர்வை வெளிவருகிறது என்று எண்ணுவதுண்டு. ஆனால் அவ்விதமல்ல. உடம்பில் இருந்து எப்போதுமே வெளிவந்துகொண்டேயிருக்கிறது. அது வெளி வந்தவுடன் காய்ந்துபோவதால் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. நம் உடம்பிற்கு எப்போதும் உஷ்ணமும் தேகாப்பியாசமும் கொடுத்து வியர்வை மிகுதியாக்கி அவை வெளிவந்தவுடன் தோல் செம்மைப்பட்டு ஆரோக்கியமாய் இருப்பதோடுகூட இரத்தமும் அழுக்கில்லாமல் சுத்தமாய் வைக்கப்படுகிறது.

அதிகமாக வியர்த்த உடம்பு காய்ந்ததும் உடம்பின்மேல் இலேசான ஒரு உப்புப்பூச்சை கவனிக்கலாம். இந்த உப்பு உடம் பில் இருந்து இதோடு வேறு அழிபொருட்களும் கலந்திருக் கின்றது. இதை நாம் போக்காவிட்டால் இந்த அழிபொருட் கள் வஸ்திரத்தில் ஒட்டிக்கொண்டு துர்நாற்றத்தை உண்டு பண்ணுகின்றன. மேலும் வியர்வை கோளங்கள் அடைபடுகின்

றன. இதனுல் விஷபதார்த்தங்கள் உடம்பின்மேல் திரும்பவும் தங்கி நோயை உண்டுபண்ணுகின்றன. ஆதலின் உடம்பை ஒவ்வொரு நாளும் சுத்தம்பண்ணுவதோடுகூட அணிந்திருக்கும் உடையையும் நன்ருய் சுத்தப்படுத்தவேண்டும். இதனுல் ஒவ்வொரு மயிர்க்காலின் அருகிலும் எண்ணெயை உண்டாக்குகிற ஒரு சிறிய கோளம் சுத்தமடைந்து தோல் வறண்டு வெடிக்காதபடியும் மயிருக்கு மினுமினுப்பையும் கொடுக்கிறது.

ஏதாவது ஒரு பொருளைப் பார்க்காமலே அதன்மேல் நம் கைபடும்போது அது இன்னதென்று உடனே உணர்ச்சி உண்டாகிறது. அங்ஙனம் உண்டாகக் காரணம் கணக்கில்லாத நரம்புகள் இருப்பதால்தான். இந்த நரம்புகள் அழுந்துகிறபடியால் அச்செய்தி மூளைக்கு எட்டுகிறது. இந்தமாதிரியாக பொருளின் தன்மையை உணர்ந்துகொள்ளுகிருேம். இந்த உணர்ச்சியில்லாவிட்டால் உடம்பைக் கிள்ளினுலும் தீயால் சுட்டாலும் நோவை அறியமுடியாது. இங்ஙனமாக தோலின் உதவியால் நரம்புகட்டுக்கும், நரம்புகளால் மூளைக்கும் சம்பந்தமிருப்பதால் தோலை நாம் சரியான நல்ல நிலைமையில் வைத்துக்கொள்ளவேண்டியதன்ருே?

நரம்புகளில் இரண்டு முக்கிய பிரிவுகள் உண்டு. அவை மூளையும், முதுகு நரம்புவடமும். மூளை: இது மண்டையாகிய எலும்புப்பெட்டியிலே பாதுகாக்கப்பட்டிருக்கிறது. முதுகு நரம்புவடத்தை, கயிறுபோல் நீண்டுவந்துள்ள மூளையின் பாகம் என்னலாம். மூளையின் அடிப்பாகத்தோடு இணைக்கப்பட்டிருக்கிற இந்த வடம் மண்டையிலுள்ள ஒரு பெரிய துவாரத்தின் வழியாக வெளிவருகிறது. இது விபத்துக்கள் ஏற்படாதபடி அற்புதமாய் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. மூளையில் இருந்தும் நரம்புவடத்தில் இருந்தும் பல சிறு நரம்புகள் புறப்பட்டு உடம்பின் எல்லா பாகங்களுக்கும் செல்லுகின்றன. எவ்வளவு நுட்பமான ஊசியை எடுத்து குத்தினுலும் அந்த ஊசி இரண்டொரு நரம்பில் பட்டு நோவைத்தரும்படியாக அவ்வளவு ஏராளமாயும் நெருக்கமாயும் நரம்புகள் உடம்பெல்லாம் பரவியிருக்கின்றன. மூளை உடம்பின் பலபாகங்களிலிருந்துள்ள சம்பவத்தை அறிந்துகொள்ளவும் தசைகளை அசைக்கவும் இரத்தாசயத்தை தகுந்தபடி அடிக்கவும் செய்ய கட்டளை அனுப்புகிறது. நாம் நடக்க விரும்பும்போது மூளை காலில் உள்ள தசைகளை அசையும்படி கட்டளை

யிடுகிறது; உடன் நடக்கிறோம். இப்படியாக நாம் ஆலோசிப்பதும் உணருவதும் ஒவ்வொரு காரியங்களை செய்வதும் மூளையால்தான். விருப்பும் வெறுப்பும் ஏற்படுவது மூளையில் இருந்துதான். உடம்பின் சர்வாங்கங்களையும் ஆண்டு நடத்துகின்றது.

நம் உடம்பை ஆரோக்கியமாயும் திடமாயும் வைத்திருந்தால் தான் நரம்புகள் ஆரோக்கியமாயும் திடனாயும் இருக்கும். நல்ல உணவையும், சுத்தமான காற்றும், தூக்கமும், மனமொழி மெய்களுக்கு சரியான தொழிலும், மனதிற்கு பரிசுத்தமான எண்ணங்களையும் கொடுத்து உடம்பை ஆரோக்கியமும் நீடித்த ஆயுளும் பெற முயற்சிப்போமாக.

(தொடரும்)

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

திருச்சிராப்பள்ளி உரோமன் கத்தோலிக் போதனுமுறைப்பள்ளியின் எமர்ஜன்சி செகண்டரி கிரேட் மாணவர்களின் ஆண்டு நிறைவு விழா

23–6–47 திங்கட்கிழமை மாலை $4\frac{1}{2}$ மணிக்கு இப்பள்ளியின் பொதுமன்றத்தில், திருக்குடும்பப் போதனுமுறைப்பள்ளித் தலைவரும், ஞானத்தந்தையும், தலைமை ஆசிரியருமாகிய Rev. Fr. A. Lourduswami, B.A., L.T. அவர்களின் சீரிய தலைமையில் விழா ஆரம்பிக்கப்பட்டது.

1. **கடவுள் வாழ்த்து.** "அருள்புரிவாய் கருணைக்கடலே" என்று துவங்குகின்ற பாடலை உருக்கமாகவும் இனிமையாகவும் திரு. சுந்தரராமன் பாடினர்.

2. பின்னர் கழகத்தின் நிர்வாகிகளால், தலைவருக்கும் ஏனைய ஆசிரியர்கட்கும் மாலைகள் சூட்டப்பட்டன.

3. உடனே அன்பு சோமு, தலைவர் அவர்கட்கும் ஆசிரியர்கள் அனைவருக்கும் "திருவுடைப்பொன்னிசூழ்" என்று துவங்கும் ஆசிரியப்பாவின்மூலம் வரவேற்பு கூறினர்.

மோகனுர் இரத்தினம் ஒரு வாழ்த்துப்பா வாசித்துத் தலைவர் அவர்கட்கும் அளித்தார்.

வெங்கடவரதனும் தமிழ்மணம் கமழ வாழ்த்துப்பா தலைவருக்கு வாசித்தளித்தார்.

பின்னர் ஆங்கிலத்தில் "Address to the President" மிகத்திறமையாக, அழகான செப்பமான ஆங்கிலத்தில் தலைவர் அவர்களின் போற்றருஞ் செயல்களையும், உழைப்பையும், பண்புகளின் மாண்புகளையும், ஆசிரியர்களின் உழைப்பும், உலகத்தாரின் ஒத்துழைப்பும், மாணவர்களின் கடமையும், கல்வியின் பயன்கள் முதலிய அருமையான குறிப்புகள் கொண்ட ஒரு வாழ்த்து வாசித்தளிக்கப்பட்டது.

4. அடுத்தபடியாக, மாணவர்கள் 36 பேர்களும் ஆசிரியர்கள் 9 பேர்களும் அமர்ந்து ஒரு அழகான புகைப்படம் எடுக்கப்பட்டது.

5. பின்னர் அறுசுவை கலந்த சிற்றுண்டிகளை அனைவருக்கும் வழங்கினார்கள்.

6. உடனே, இன்னிசை ஆசிரியர் விக்டர் அவர்கள் பிடில், திரு. மாதவராவ், திரு. சிவராம ஐயர் மிருதங்கம், இப்பக்கவாத்தியங்களுடன் முதலில் திரு. இராமமூர்த்தி அவர்களும், பின்னர் திரு. சுந்தரராமன், திரு. மாதவராவ், திரு. யூஜின் ஜோசப் ஆகியவர்களும் மிகவும் இனிமையாகவும் சங்கீதக்கலையில் தங்கள் தங்கள் திறமையையும் அரிய பாட்டுக்கள் பாடி விளக்கிக்காட்டினார்கள்.

7. **சொற்பொழிவுகள்:** (1) "Who is who?" என்ற தலைப்பில் செல்லப்பெயர்களை மாணவ ஆசிரியர்கட்கு திரு. தங்கவேல் அவர்கள் வாசித்தளித்து குறிப்புரை கூறவும், தோழர்களும் ஆசிரியர்களும் உவமை மிகுதியால் சதா கைதட்டிக்கொண்டே இருந்தனர்.

(2) "பள்ளி அனுபவங்கள்" என்ற தலைப்பில் ஆசிரியர்களின் திறமைகளையும், உழைப்பையும், தலைமை ஆசிரியரின் ஊக்கமும், சுறுசுறுப்பும், அறிவுரைகளும் மோகனூர் இரத்தினம் அவர்கள் மிகவும் விரிவாகவும் அழகான தமிழிலும் பேசினார்கள்.

(3) "ஆசிரியர்கள் காட்டிய வழி" என்ற தலைப்பில் ஆசிரியர்களின் வாழ்க்கையை முறையாக சவரிமுத்து அவர்கள் எடுத்துக்காட்டினர்.

8. **தலைவர் பின்னுரை:** மாணவர்களின் கடமையை விளக்கிக்காட்டியும், தனித்தனி திறமை ஒவ்வொரு மாணவரிட

9/0012

மும் அமைந்திருப்பது போற்றத்தக்கது என்றும், எவ்வாண்டிலும் இத்தகைய திறமைசாலிகளான மாணவ ஆசிரியர்கள் பயிற்சி பெறவில்லை என்றும், எல்லா மாணவ ஆசிரியர்களும் முழு வெற்றி பெறுவது திண்ணம், அதுவே அவரது எண்ணம் என்றும், பரீட்சை காலங்களில் தாம் ஆண்டவனைத் தொழுது ஜெபம் செய்வதாகவும், எல்லோரும் "நல்லாசிரியர்கள்" என்ற பெயர்பெற்று தாய்ப்பள்ளிக்கு நல்ல புகழைத்தேடி அளிப்பதே மாணவர்களின் கடமை என்றும், இப்பள்ளிக்கும் மாணவர்களுக்கும் பழைய மாணவர் கழகத்தின்மூலம் நீங்கா தொடர்பு என்றென்றும் வைத்துப் போற்றுதலுடன், "பூங்கொத்தை" அவரவர்களின் கட்டுரை மேம்பாட்டால் திங்கள்தோறும் அலங்கரிக்கவேண்டும் என்றும் இறுதியாக பரிபூரண ஆசி செலுத்துவதாகவும்; மிகவும் புன்னகையும், மகிழ்ச்சியும் பொங்க மடை திறந்த வெள்ளம்போல் தூய தமிழில் சீரிய முறையில் தலைவர் அவர்கள் பின்னுரை வழங்கினர்.

9. கடைசியாக M. P. அந்தோனிசாமி அவர்களால் தனித்தனியாக தலைமை ஆசிரியர், ஆசிரியர் அனைவர்களின் உழைப்பின் மேன்மையும் அவர்களின் உற்சாக வேலைகளின் திறமைகளையும் எடுத்துக்காட்டி அனைவருக்கும் "எமர்ஜன்ஸி செகண்டரி கிரேட் மாணவ ஆசிரியர்கள்" சார்பாக நன்றிகூறினர்.

"காந்திமகான்" என்ற துக்கடாவை குளித்தலை சுந்தரராமன் நகைச்சுவை ததும்பப்பாடி இன்னிசையில் அனைவரையும் மூழ்கச்செய்தார்.

"பள்ளிவாழ்த்து" அனைவராலும் ஒருங்கே பாடப்பட்டு $8\frac{1}{2}$ மணிக்கு விழா இனிதே முடிந்தது. வணக்கம்.

(மங்களம்.) தயாரிப்பு :

விழா அமைச்சன் : அன்பு : சோமு.

25–6–47.

WANTED—Two Higher Grade trained teachers. Preference will be given to couples.

Apply to the Manager, R. C. Schools, Manaparai.

ஏழையின் கண்ணீர்

[ஹென்றி]

6. பிரிவும் பரிவும்

மீனா, பாலு, பிரேம்குமார், லைலா, வீணா, ரகு அறுவரும் பாலுவின் பங்களாவிலேயே இருந்துகொண்டு மீனாவின் எரிந்த வீட்டிற்குக் கூரைபோட்டார்கள். பிரேம்குமாரின் லீவு முடிந்ததும் பாடசாலைக்குப் போய்வர ஆரம்பித்தான். ரகுநாதனும் தனது ஆரம்பப் பாடசாலைக்குப் போய்வர ஆரம்பித்தான். மாதங்கள் பறந்தன ! வீணாவின் மனத்தில் இலேசாக தன் மகளும் மருமகனும் இருக்கும்பொழுது ரகுவும் இதே வீட்டில் மீனாவுடன் ஒட்டிக்கொண்டிருப்பது பிடிக்கவில்லை. பல நாட்களாக மனம் குமுறிக்கொண்டிருந்தது. ஜாடையாக ரகுவை வெறுப்பதை காட்ட ஆரம்பித்தாள். மீனாவும் வீணாவின் மனப் போராட்டத்தை அறிந்துகொண்டாள்.

ஒருநாள் ரகுநாதன் மாலையில் பள்ளிக்கூடம் விட்டு வந்ததும் வீணா அவனிடம் " ரகு உங்கள் வீட்டைச்சற்று மெழுகி வைத்துவிட உங்கள் அம்மா பிரியப்படுகிறாள். நீயும் கூடப்போய் அதை செய்து முடித்துவிட்டுவா " என்றாள். ரகு பாடசாலையில் கஷ்டப்பட்டு பாடம் போதித்துவிட்டு வந்த அலுப்பினால் " இப்பொழுது என்ன அவசரம் ? அவர்களுக்கு வேலையென்ன " ? என்றான். வீணாவின் முகம் எரிச்சலால் மாறுபட்டது. ஆத்திரமாக அவள் எத்தனை நாளைக்குத்தான் இப்படியே இங்கே நுழைந்துகொண்டிருக்க நினைக்கிறீர்கள் ?' ' என்றாள். ரகுவின் இதயத்தில் சம்மட்டியால் அடிப்பதுபோலிருந்தது. அதேசமயம் பாடசாலையிலிருந்து வந்த பிரேம்குமாரை பரிதாபமாகப் பார்த்தான் ரகு. திரும்பவும் வீணாவைப்பார்த்து, " அத்தை ! மன்னித்துக் கொள்ளுங்கள்; புத்திவந்தது. அம்மாவும் நானும் தனியாக அந்த பழைய குடிசைக்கே போய்விடுகிறோம், கவலைப்படவேண்டாம் " என்றான். பிரேம்குமார் திகிலுடன் " என்ன ? என்ன சமாச்சாரம் ? " என்றான். ரகு அண்ணனைப் பார்த்தான். ரகுவின் நீர்வழியும் கண்களைக் கண்ட பிரேம்குமார் : " என்னடா, ஏன் அழுகிறாய் ?...என்ன அத்தை சமாச்சாரம் ? " என்றான். வீணா பேசாமல் உள்ளே போய்விட்டாள். ரகு பிரேம்குமாரிடம் எல்லா சமாச்சாரங்களையும் கூறிவிட்டு மறுநாள் தான் எரிந்து வேயப்பட்ட கூரைவீட்டிற்கே போகப் பிரியப்படுவதாகவும், தாயார் வந்தால் கூட்டிப்போவதாகவும் கூறி அழுதான். பிரேம்குமார் ரகுவிடம் ஒன்றும் கூறாது மாடிக்குப் போனான். லைலா அங்கே படுத்துக்கொண்டு ஒரு புத்தகம் வாசித்துக்கொண்டிருந்தாள். உள்ளே நுழைந்த குமாரைக் கண்ட லைலா புன்னகையுடன் எழுந்தாள். குமாரின் முகம் சோகமாக இருந்ததைக்கண்ட லைலா திடுக்கிட்டு எழுந்து அவனண்டை வந்து " என்ன அத்தான் ? ஏன் ஒருமாதிரி இருக்கிறீர்கள் ? " என்று அவன் கரங்களைப் பிடித்துக்கொண்டு கேட்

டாள். பிரேம்குமார் புன்னகையை வரவழைத்துக்கொண்டு "ஒன்றுமில்லை. அம்மாவும் தம்பியும் நாளைக்குத் தனியாக பழைய கூரை வீட்டிற்கு குடி போகிறார்களாம்" என்று சொல்லி நிறுத்தினான். லீலா "ஏன்?" என்று கேட்கவில்லை. தன் தாய் சிலநாட்களாக ரகுவிடமும் மீனாவிடமும் பேசிய தோறணையிலிருந்தே அவ்விருவரும் தங்கள் வீட்டில் இருப்பது அவளுக்கு பிடிக்கவில்லை என்று தெரிந்தது. ஆதலால் அவள் மௌனமாக இருந்தாள். இருவரும் மெத்தையில் மௌனமாக இருந்தார்கள்.

ஏழை ரகுநாதன் தன் தாயாரைக் கண்டான். அம்மா! நீ அண்ணன் வீட்டிலேயே இரு. நான் நம் பழைய வீட்டிற்கு நாளையிலிருந்து குடிபோய்விடுகிறேன். ஹோட்டலிலிருந்து சாப்பாடு வரவழைத்துக்கொள்ளுகிறேன்" என்றான் ரகு. அதைக் கேட்டு ஆச்சரியமடைந்த மீனா, "ஏண்டா"? என்றாள். ரகு உடனே "நீங்கள்தான் அத்தையிடம் பழைய வீட்டை மெழுகி வெள்ளையடித்து சுத்தப்படுத்த வேண்டும் என்றீர்களாமே" என்று கூறினான். மீனா ஆச்சரியத்துடன் "அப்படி சொல்லவில்லையே!" என்றாள். ரகுவும் திடுக்கிட்டு வீணாவுடன் நடந்த சம்பாஷணைகளைக்கூறி நாளைக்கு தங்கள் வீட்டிற்கு போவதைக் குறித்து நிச்சயம் பண்ணிவிட்டு பிரிந்து தன் அறைக்குச் சென்று கதவைத் தாள் இட்டுக்கொண்டு கட்டிலில் படுத்து கண்ணீர் விட்டான். பாலு மாலை வெளியிலிருந்து வந்து வீட்டில் துக்க அமைதி நிலவுவதைக் கண்டு ஆச்சரியத்துடன் வீணாவைக் கூப்பிட்டு விசாரித்தார்.

"என்? மௌனமாக வீடு இருக்கிறது?"

"யாருக்குத்தெரியும்? அவாள் அவாள் மனதில் என்ன இருக்கிறதோ? யார் கண்டார்கள்?"

"ரகு, மீனா எல்லாம் எங்கே?"

ஏன்! அவர்களுக்கு என்ன வைத்திருக்கிறீர்கள்?"

"கேட்டால் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லு."

"தெரியாது"

முரட்டுத்தனமுள்ள வீணாவைத் திட்டிக்கொண்டே சமயல் அறைக்குள் எட்டிப்பார்த்தார். மீனா கண்ணீர் விட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டு "என்ன? ஏன் மீனா அழுகிறாய்?" என்று வாத்ஸல்யத்துடன் கேட்டார்.

"அண்ணா! நானும் சின்னவனும் எங்கள் வீட்டிற்கு நாளையிலிருந்து குடியாகப் போய்விடுகிறோம்."

"ஏன்?......ஒன்றாக இருப்பதை விட்டுவிட்டு இப்படி போக வேண்டும். இது என்ன பைத்தியக்காரத்தனம்?"

மீனா வீணாம்பாள் சொன்னவைகளைச் சொல்லி வீட்டில் கலவரத்தைக் கிளப்பிவிடப் பிரியப்படவில்லை. குமுறின மனத்தை அடக்கிக்

கொண்டு: "சிலகாலம் அந்த வீட்டில் இருந்துகொண்டு வாழ்வது தான் நல்லது. அல்லது வீடு பாழாகிவிடும்" என்ருள். பாலுவும் அதை அங்கீகரித்தார். மறுநாட்காலையில் ஒரு வண்டியில் மீனுவும் ரகுவும் தங்கள் குடிசைக்கு குடிபோக புறப்பட்டார்கள். தாயின் துயர நிலையைக்கண்ட பிரேம்குமார் கண்ணீர் விட்டான். வீணும்பாள் வெளியே வந்து "ஏதோ அவசரம் ஆத்திரம் என்றிருந்தால் சொல்லுங்கள்" என்று மீனுவைப் பார்த்துக் கூறினுள். வண்டி புறப்பட்டது. அந்த வீட்டில் இறங்கின பின்புதான் மாதம் 36 ரூபாயில் குடும்பம் நடத்தவேண்டிய கோரநிலை அவர்களுக்குத் தென்பட்டது! ஆயினும் என்னசெய்வது? நாட்கள் ஓடின!

ஒருநாள் அவன் டாக்டர் வீட்டின்முன் உலாவிக்கொண்டிருக்கையில் மாடியிலிருந்து சாந்தி கூப்பிடுவதைக்கண்டதும் பங்களாவிற்குள் போனுன். சாந்தி அவனை மாடிக்கு கூட்டிக்கொண்டுபோய் உட்கார வைத்துக்கொண்டு பேசினுள். ரகு தானும் தன் தாயாரும் வேறு வீட்டிற்கு குடியாக வந்துவிட்டதைக் கூறினுன். சாந்தியும் ரகுநாதனும் டாக்டர் வீட்டில் இல்லாத சமயம் வேலைக்காரியை எங்காவது அனுப்பிவிட்டு பேசிக்கொண்டிருப்பார்கள். இது டாக்டருக்குத் தெரியாது. டாக்டர் வெளியே போய்விட்டாரா இல்லையா? என்பதை அறிய ஒவ்வொருநாள் மதியமும் மாலையும் பள்ளிக்கூடம் விட்டவுடன் டாக்டரின் வீட்டிற்குமுன் ரகு உலாவுவான். என்னே காதலின் சக்தி!

மாதம் ஒன்று ஆகிவிட்டது. பிரேம்குமார் அடிக்கடி தாயை வந்து பார்த்துவிட்டுப்போனுன். மீனு அந்த பஞ்சகாலத்தில் அரிசி கிடைக்காமலும்; சொற்ப சம்பளத்தாலும் திண்டாடிக்கொண்டிருந்தாள். ஏழை நிலையிலிருந்த பிரேம்குமார் இன்று செல்வந்தனுகிவிட்டான்! வாழ்வு ஒருகாலம்; தாழ்வு ஒருகாலம் என்பதை அவனது வாழ்க்கை நிரூபித்துவிட்டது. தனது ஏழைத்தாயின் கண்ணீரைப் பார்த்தான். அவனது நெஞ்சம் உருகிற்று. தான் சுகமாயிருக்கவும் தன்னைப்பெற்ற தாய் கண்ணீரோடு வாழவும் அவன் விரும்பவில்லை. தாய்க்கு பொருளுதவி செய்தான். மாதாமாதம் வீட்டில் உள்ள பணத்தில் லீலாவுக்குத் தெரியாமல் ஏதாவது காரணங்களைக்காட்டி இருபது ரூபாயை தன் தாயின் போஷணைக்கு அளித்தான். ஆனுல் அரிசி ரேஷனுல் அவதிப்படும் இந்த காலத்தில் பணத்தை என்ன செய்வது? டாக்டர் வீட்டிற்கு அடிக்கடி ரகு போய்வருவதாகக் கேள்விப்பட்டு இன்னும் மனம் வருந்தினுன். பாவம்! "கோதுமை மாவு அவன் உடலுக்கு சேரவில்லைபோலும்" என்று! இந்த நிலையில் அரிசி தாய்க்கு எப்படி சம்பாதிப்பது? எங்கும் பஞ்சம்! ரேஷன்தானே? தன் வீட்டில் மாத்திரம் கண்ட்ரோலுக்கு கொடுத்துவிட்டு மீதி நெல்லை அரைத்தும், குத்தியும் (உரலில்) அரிசியாக வைத்திருப்பது அவனுக்குத் தெரியும். ஒருகணம் அவனது சிந்தனு சக்தி சுழன்றது.........

வீணுவும் லீலாவும் வெளியே செல்லும் நேரத்தில் ஒரு மரக்கால் இரண்டு மரக்கால் என்று மூட்டையிலிருந்து அரிசியை எடுத்து ஒரு பையில் போட்டுக்கொண்டு தன் தாயிடம் சேர்த்துக்கொண்டிருந்தான்! இது கொள்ளை என்று அறிந்தும் அவனது தாயன்பினுல் மனச்சாட்சி அமுக்கப்பட்டுவிட்டது!

மீனு அநேகந்தரம் அரிசி எது என்று கேட்டும் உண்மையை சொல்லாமலிருந்தான். பிரேம்குமார் ஒருநாள் இப்படியே அரிசியை (திருடி)க்கொண்டுவந்து தன் தாயிடம் கொடுத்துவிட்டு ரகுநாதனுடைய திருமண விஷயமாக பேச ஆரம்பித்தான்.

"ஏனம்மா ரகுவிற்கு ஒரு கலியாணத்தை செய்துவிட்டால் நல்லது என நினைக்கிறேன். உங்களுக்கு எந்த பெண்ணை பிடிக்கிறது?"

"கலியாணமா? வாத்தியாரு வேலையிலே இருந்துகொண்டு இருக்கும் எவளாவது ஒருவளைத்தான் பார்க்கணும்.'

"யார் இருக்கிருர்கள் அப்படி?......அதுவும் நம் ஜாதியில்!"

"இப்ப என்னடா அவசரம். கடன் யார் கொடுக்க காத்திண்டு இருக்கிருர்கள்"

"கடனு?......"

"ஆமாம்."

"எதற்கு?"

"வாத்தியாரு வேலையிலே இருக்கிற எவண்டா கடனில்லாமல் கலியாணத்தை முடிச்சவன்? வெட்கமாகூட இருக்கு கடன் வைக்க!

"அதற்கு நாம் ஏன் வெட்கப்படனும். இப்படி அழகு சம்பளம் தருகிறதற்கு கல்வி இலாக்காவே அல்லவா வெட்கப்படனும்!"

"ரகுவை கேட்டுச் சொல்லுகிறேன்"

"ரகு எங்கே?"

"எங்கேயோ 'வாகிங்' போய்விட்டான்!"

"சரி கேட்டு வையுங்கள். வருகிறேன்"

பிரேம் குமார் போனபின்பு ரகுநாதனுக்கு ஒரு கலியாணத்தைச் செய்து பார்க்கவேண்டுமே என்கிற ஆசை அவளுள்ளத்தில் பிறந்தது. ஆனல் பணம்?......பெண்...? ஏழையின் கண்ணீருக்கு தெய்வம் செவி சாய்க்குமா?...அவளது சிந்தனைசக்தி சுழன்றது. அச்சமயம் சோர்ந்த முகத்துடன் ரகுநாதன் உள்ளே பிரவேசித்தான். அவனது முகத்தில் ஸ்வாரஸ்யமின்மையைக்கண்டு அவனுடன் "ஏண்டா! ஒரு மாதிரி இருக்கிருய்?" என்ருள். ரகுநாதன் "ஒன்றுமில்லையம்மா" என்று கூறிவிட்டு சிறிது நேரம் கழித்து "டாக்டர் ஜெகதீஸனுக்கு இரண்டு நாளாய் இலேசாக ஜுரம் இருந்ததாம். இன்று திடீரென 104° ஜுரத்தில் இருக்கிருர். பெரிய பெரிய டாக்டர்கள் எல்லாம் சந்தேகம் என்கிருர்கள். பாவம்!" என்ருன். மீனு "ஸ்தௌபாவம்!" என்று வருத்தப்பட்டாள். (தொடரும்)

சங்க விழாக்கள்

ஆர். ஸி. ஆரம்பப்பாடசாலை, பட்டர்ஓர்த் ரோடு, திருச்சி வருடாந்திர கொண்டாட்டம்

24—4—47 மாலை 4 மணிக்கு ஸ்ரீமான் S. J. இரத்தினசாமி, M.A., B.L. (Public Prosecutor, Trichy) அவர்களின் தலைமையின்கீழ் போட்டிப்பந்தயங்கள் நடைபெற்றன. இறுதியாக தலைவரின் சிறந்த சொற்பொழிவுக்குப்பின் பரிசுகள் வழங்கப்பட்டு அன்றைய வைபவம் முடிவடைந்தது. 26—4—47 மாலை 5 மணிக்கு ஸ்ரீமான் S. வீராசாமி பத்தர், M.A., L.T. அவர்களின் தலைமையின்கீழ் வருடாந்திர விழா நடைபெற்றது. அவ்வமயம் ஆடல்பாடல்களும் தியாகராஜன் என்ற சிறு நாடகமொன்றும் நடைபெற்றது. பின்னர் ஸ்ரீமான் V. அந்தோனி 'வீடும் பாடசாலை' என்பதுபற்றியும், ஸ்ரீமதி R. அந்தோனியம்மாள் 'பெண் கல்வி, கல்வியின் அவசியம்' என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். இறுதியாக தலைவரவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டதுடன் மாணவர்கள் கல்விபயிலுவதின் அவசியத்தைப்பற்றி தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. பின்னர் விஜயஞ்செய்தோருக்கு நன்றி கூறப்பட்டு வைபவம் இனிதே முடிவடைந்தது.

J. Jesudoss Swaminathan,
Headmaster.

பூதலூர் உபாத்திமை சங்க ஆண்டுவிழா

27-4-47 மாலை 2-மணிக்கு தஞ்சை ஜில்லா கல்வியதிகாரி ஸ்ரீமான் T. கிருஷ்ணமாச்சாரியார், M.A., L.T. அவர்கள் தலைமையின்கீழ் வைபவம் ஆரம்பமாயிற்று. அவ்வமயம் ஸ்ரீமதி K. மீனாட்சி அம்மாள், B.A., L.T. அவர்கள் 'பிள்ளைகள் உடல், உள நடத்தை வளர்ச்சிகள்' என்பதுபற்றியும், திரு. கல்யாணசுந்தரம்பிள்ளை, B.A., L.T. அவர்கள் 'பள்ளியில் ஆட்சிப்பயிற்சி' என்பதுபற்றியும், திரு. P. M. துரைசாமி நாடார், B.A., L.T. அவர்கள் 'ஆரம்ப ஆசிரியரின் முன்னேற்றம்' என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் லேபர் ஆபிஸர் திரு. E. வில்லியம்ஸ், B.A. அவர்கள் ஆசிரியர்கள் போட்டிப்பந்தயத்திற்குப் பரிசுகள் வழங்கினார்கள். ஆசிரியர்களின் சிறந்த கால நிகழ்ச்சிகளுக்குப்பிறகு தேனீர் விருந்து நடத்தப்பட்டது. சங்கக்காரியதரிசி திரு. V. கோவிந்தசாமியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு விழா இனிது முடிவெய்தியது.

V. கோவிந்தசாமி,
காரியதரிசி.

பாளையம் எயிடேட் ஸ்கூலின் ஆண்டுவிழா

10–5–47 டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் T. V. பாலசுப்பையா பிள்ளை அவர்கள் தலைமையின்கீழ் வைபவம் ஆரம்பமாயிற்று. தலைவரவர்கள் 'ஆசிரியர் பெற்றோர் கடமைகள்' என்ற விஷயம்பற்றி சொற்பொழிவாற்றினார்கள். மாணவர்களின் சிறந்த ஆடல் பாடல்களுக்குப்பின் பெற்றோர் சங்க காரியதரிசி N. சின்னையா ஆசிரியரால் நன்றி கூறப்பட்டு ராஜவாழ்த்துடன் வைபவம் இனிது முடிவடைந்தது.

உத்திரியம்மாள்,
மானேஜர்.
M. குழந்தைசாமி,
தலைமை ஆசிரியர்.

கோட்டையூர், மாணவர், பெற்றோர் சங்க திறப்புவிழா

கோட்டையூர் கிராம மறவர் வித்யாசாலையில், மாணவர் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ. பி. சீனிச்சாமி தேவர் தலைமையில் வைபவம் நடைபெற்றது. மாணவர், மாணவிகளால் பலவித ஆடல் பாடல்கள் நடத்தப்பட்டது. தலைமை ஆசிரியர் வி. மனுவேல் தேவர் 'பாடசாலைகளும் போதனுவிஷயப் பூங்கொத்தும்' என்பதுபற்றியும், எஸ். ராயப்பன் சங்க அவசியத்தைப்பற்றியும் பேசினார்கள். வந்தனோபசாரத்துடன் விழா இனிதே முடிவடைந்தது.

V. Manuel Thevar,
Headmaster.

கருமத்தம்பட்டி ஆர். ஸி. உயர்தரப்பள்ளியின் ஆண்டு விழா

26–4–47 மாலை கோவை ஜில்லா கலெக்டர் துரை அவர்களின் மனைவியார் மிஸஸ். ரூத்மோரிஸ் அம்மையாரின் தலைமையின்கீழ் நடைபெற்றது. தலைமை ஆசிரியரால் ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டது. திரு. M. ஆரோக்கியசாமி, M.A. அவர்களால் 'கல்வியும் பெற்றோர் கடமையும்' என்பதைப்பற்றி சிறந்த சொற்பொழிவாற்றப்பட்டது. மாணவர்களால் ஆடல் பாடல்களும், 'ராஜ்யஸ்ரீ' என்ற நாடகமும் நடத்தப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப்பின், தலைமை ஆசிரியரால் வந்தனோபசாரம் கூறப்பட்டு வைபவம் முடிவுற்றது.

N. R. Nanjundeswaran,
Headmaster.

செஞ்சிலுவை சங்க வருடாந்தர கொண்டாட்டம்

ஆர். சி. ஆண்பாடசாலை, அனந்தராயன்கோட்டை, திண்டுக்கல் ரேஞ்சு

இப்பாடசாலையின் செ. சி. சங்க வருடாந்திரக் கொண்டாட்டம் 26-6-47 வியாழன் அன்று காலை ஹை ஸ்கூல் மானேஜர் சங். R. சவரி முத்துசுவாமி அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. சங்கத்தார் 40 பேரும் பலவித சின்னங்களுடனும் பாட்டுகளுடனும் ஒரு ஊர்வலம் சென்றனர். பின்னர் செ. சி. சங்கத்தின் நோக்கம், உதவி முதலியவை பேசப்பட்டு பிள்ளைகளுக்கு தின்பண்டங்களும் ஆசிரியர்களுக்கும் மற்றும் முக்கியஸ்தர்களுக்கு சிற்றுண்டியும் வழங்கப்பட்டு ராஜவாழ்த்துடன் சங்கம் கலைவுற்றது.

M. ஆரோக்கியம்.

கிராமச் சீரமைப்பு விழா

திட்டச்சேரி போர்டு பெண்பாடசாலை

9–5–47 பிற்பகல் திருமகல் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. அவ்வமயம் (1) கிராமச் சீரமைப்பு, (2) பெண்கல்வி, (3) சுகாதாரம், (4) கட்டாயக்கல்வியும் பெற்றோர் கடமையும் என்பவைபற்றி முறையே ஜனுப் முகம்மது இப்ராஹீம், டாக்டர் மோஹல், டாக்டர் மயூரநாதன், ஆசிரியர் சௌரிராஜன் ஆகியோர் பேசினர். மாணவிகளின் நடிப்புத்திறமைக்கு ஜனுப் முகம்மது உசேன் அவர்களால் வெகுமதி அளிக்கப்பட்டது. பின்னர் போட்டிப்பந்தயங்களில் வெற்றி பெற்றவர்களுக்குத் தலைவரவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டு, ஆசிரியர் ரெங்கசாமி அய்யங்கார் அவர்களின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிவெய்தியது.

Lizzie Muthiah,
Headmistress.

விடுகதை விடைகள்

(கொத்து 37, மலர் 12, பக்கம் 239)

விடைகள் : 1. கிளிப்பிள்ளை. 2. எலி. 3. அரிமணை 4. சுண்ணும்புச்சட்டி. 5. நெல்.

நிலவு

[த. ப. நாதன்]

வாய்ப்பு

குழைகின்ற வெண்ணெய்ப் பந்து
கொடுவெனக் கேட்டான் மைந்தன் ;
அழைத்தெனை வெளியில் வந்தே
அழகிய மதியைக் காட்டி
விழைந்தனன் பந்தே யென்று !
வெறிச்சென முகிலுள் நிலவு
நுழைந்ததும் நாளைக் கென்றான் !
உதித்திட்ட மதியைக் கண்டேன் !

வாழ்த்து

சேற்றிடை முளைத்த பூபோல்
செழுங்கதிர்க் கற்றை யுமிழ்ந்து
வீற்றிடும் நிலவே வாழி !
வெள்ளியின் வண்ணக் குழம்பை
ஊற்றிடு மதியே வாழி !
உலகிருள் ஒழிக்கப் பிறந்த
கூற்றமே வாழி ! என்று
வாழ்த்தினேன் என்றும் வாழி !

வெள்ளி மயம்

" பணக்குன்று பார்க்க வேண்டி
பதைத்திடு மனிதா பார்ப்பாய் !
உனதரும் மெத்தை வீடே
உருகிடு வெள்ளிக் குன்றம் !
அணங்குகள் அழகுப் பிம்பம்
அசைகின்ற வெள்ளிச் சிலைகள் ;
மணலெலாம் வெள்ளி ! " என்ற
மதியதன் மதியைக் கேளீர் !

கடலும் நிலவும்

காலத்திற் போக்கிற் கழியும்
கணக்கிலா மணிகள் போல
சாலவாம் அலைகள் கொண்டு
சங்கீதம் இசைக்கும் ஆழி,
ஏலமாம் கூந்தல் பிரிந்தே
இருப்பவன் உள்ளம் ஒப்ப,
கோலமாம் நிலவைப் பார்த்துக்
குமுறிடும்; பின்னர் பொங்கும்

ஆம்பலும் நிலவும்

செழித்ததால் கமலப் பெண்ணாள்
சினந்தனன் ஆம்பல்; இந்தப்
புழுக்கத்தைப் போக்க வந்தாள்
புதுவெழில் நிலவுத் தோழி!
கழுக்கென நகைத்தாள் ஆம்பல்;
கடிமலர்க் கமலங் குவித்தாள்
பொழுதிலும் இரவு மாகப்
புதுமையிற் பொதுமை யுற்றார்!

முரண்பாடு

காதலர் நெஞ்சில் அனலாம்
களிப்பது மூள, அதனால்
மோதிடும் இன்பந் தன்னை
முகர்ந்திடச் சேர்க்கை கொள்வர்!
வாதனைக் கடலில் மூழ்கி
வாடிடுங் கொடியை யொக்குங்
கோதையர், வீட்டின் புறத்தே
குமுறுவர் பழைய நினைவால்

ஒப்பனை

மணிமிளிர் வானப் பரப்பில்
மண்டிடு நீலந் தன்னை
அணியெழி(ல்) ஆடை யாக்கி
அடக்கமாய் உடலை மறைத்து

குனிந்தவள் செல்லுங் காட்சி,
குரைக்கின்ற திரைகட் கிழித்து
திணிபுனல் கடலின் நடுவே
திகழுமாம் படகை நிகர்க்கும்!

தமிழும் நிலவும்

கலங்கரை விளக்கங் காட்டுங்
கதியினில் தமிழர் வாழ்ந்தே
உலகிருள் யாவும் போக்கி
உவப்பொளி யீந்தாள் அன்னாள்!
இலங்குவெண் மதியும் தமிழும்
இயற்கையில் திரண்ட தாலே
கலங்குவோர் மனத்தில் இன்னாள்
அச்செய்தி கழறும் நிலவே!

210012
சென்னை 600 008

WANTED—One secondary grade trained teacher (female) to the R. C. Girls' School, Anandarayankottai, Dindigul P. O. Apply to the Manager.

WANTED—Two Higher Elementary Grade trained teachers (Catholics) to join on 20-7-1947, the latest. Terms as advertised by the Government. For particulars apply in person or by correspondence to Rev. Fr. Elias D'Souza, R. C. Church, Vichoor, Ammapatnam P. O., Tanjore Dt.

WANTED—One Secondary Grade Mistress, to St. Mary's G. H. E. School, Manaparai. Apply to the Correspondent, St. Mary's Girls' H. E. School, Manaparai.

WANTED—Two Secondary Grade trained male teachers.
Apply to: THE MANAGER,
R. C. Higher Elementary School,
Purathakudy, Irungalore P.O., Trichy Dt.

WANTED—One Secondary Grade trained teacher on a decent scale of pay. Those who wish may correspond for particulars.

Rev. Fr. S. M. Rayappan,
Manager, St. Mary's Higher Ely. School,
Kolappalur, (*via*) Erode & Gobi.

St. Antony's Art Industries,
Convent Road,
Cantonment, Trichinopoly H. O.

விற்பனைக்குத் தயார் !

பலகையில் அழகிய பல வர்ணங்களில் தீட்டப்பெற்ற

சித்திரங்கள் !!

கீழ்க்கண்ட மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் இவை பூகோள சாஸ்திரம் கற்பிப்பதற்கு மிக அவசியமானவை

(1941-ம் வருஷம் ஆரம்ப பாடசாலையில் பல வகுப்புகளுக்கு வெளியிடப்பட்ட புதிய பூகோள பாடத்திட்டங்களை ஒட்டி தயாரிக்கப்பட்டவை)

1. ஆர்டிக் பிரதேச வாசிகள்
2. லாப்லாந்து வாசிகள்
3. ஸஹாராப் பாலைவன வாசிகள்
4. பாலஸ்தீன் வாசிகள்
5. மத்திய ஆப்பிரிக்கா வாசிகள்
6. காங்கோப் பிரதேச வாசிகள்
7. வட அமெரிக்கா வாசிகள்
8. மத்திய ஆசியா வாசிகள்
9. இங்கிலாந்து வாசிகள்
10. ஸ்விட்ஸர்லாந்து வாசிகள்

இப்பத்து செட்டுகளின் விலை ரூ. 80

☞ தபால் செலவு பிரத்தியேகம் ☜

இன்னும் சரித்திர சம்பந்தமான சித்திரங்கள், தேசப்படங்கள் விரைவில் தயாரிக்கப்படும்.

முழு விபரங்களுக்கு எழுதவும்.

Reg. No. M. 1534.

எம்மலர் ?

(R. Arokiasamy, Pannikulam.)

அறிவு ஆற்றும் அமிர்தமலர்
ஆசை யூட்டும் ஆச்சரியமலர்
இன்பம் பயக்கும் இனியமலர்
ஈன்ற தாயின் இனியமலர்
உன்னத மிகும் உகந்தமலர்
ஊக்கம் ஊட்டும் ஊரணிமலர்
எல்லோரும் விரும்பும் ஏகமலர்
ஏழையும் ஏற்கும் எங்கள்மலர்
ஐரோப்பா கடக்கும் கற்பமலர்
ஒவ்வொருவரும் ஓரும் ஒண்மைமலர்
ஓர் அரிய ஆசான் ஆசிமலர்

"நம் போதனாவிஷயப் பூங்கோத்துமலர்"

Editor and Publisher: Rev. Fr. A. Lourduswami, B. A., L. T.,
Headmaster, R. C. Secondar[illegible]raining and High School.
Printed by Rev. [illegible]usai Regis,
Supt.. St. Joseph's Industrial Scho[illegible]ress, Trichinopoly.
Q. H. No. Ty.—I, 14—7—1947.